**நீர் வளங்கள் சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீர் வளங்கள் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்

கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீர் வளச் சபை 1978 ஆம் ஆண்டு முதல் நடாத்திச் செல்லப்பட்ட ஹெக்டர் கொப்கேடுவ மாவத்தையின் பிரதான தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணிக்காக 2013 ஆம் ஆண்டு முதல் வருடாந்தம் ரூபா 12,772,000 வாடகைத் தொகை | சபையின் தலைமை அலுவலகம் நடாத்திச் செல்லப்பட்ட கொழும்பு 07, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள காணி அரசாங்க காணியாக | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

செலுத்தி வருடாந்த வாடகை அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளுமாறு திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரின் 2016 யூலை 05 ஆந் திகதிய நி.பிறாளே/1/10/2/160 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தால் 2019 ஆம் ஆண்டின் போது கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. அந்த வழக்கின் தற்போதைய நிலை தொடர்பாக எந்த தகவலும் சபையிடம் காணப்படவில்லை. அது தொடர்பான விளக்கமளித்தல் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தால் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் அதன் மூலம் எழக்கூடிய நிகழத்தக்க பொறுப்புக்களுக்காக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இருந்ததுடன் நீண்டகால வாடகையின் அடிப்படையில் அது சபைக்கு வழங்குவதற்கு கோரிக்கை விடப்பட்ட போதிலும் வருடாந்தம் ரூபா 12.772 மில்லியன் வாடகைத் தொகையின் கீழ் குறுங்கால அடிப்படையில் பெறுமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதும் அதற்காக இணங்கி வாடகை உடன்படிக்கை ஏற்படுத்தியிருக்கவில்லை. நீண்டகால வாடகை அடிப்படையில் வழங்குமாறு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையை கவனத்தில் கொள்ளாமல் காணியிலிருந்து விலகும் கட்டளை விநியோகித்து கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. எனினும் 2020.10.12 ஆந் திகதி நடைபெற்ற வழக்குத் தினத்தின் போது இருதரப்பினரும் அரசாங்க நிறுவனமாக இருந்தமையால் வழக்கு நடவடிக்கைகளை நடாத்திச் செல்லாமல் சமசரத்திற்கு உடன்படுமாறு சட்டமா அதிபர் அறிவித்ததாக திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்திலிருந்து அறிவிக்கப்பட்டிருந்தது. வழக்குத் தொடர்தல் தொடர்பாக நம்பிக்கையாக உறுதிப்படுத்த முடியாதிருந்ததுடன் நிகழத்தக்க பொறுப்பாக வெளிப்படுத்துவதன் தேவை காணப்படாதிருந்த நிலைமை தற்போது காணப்படுகின்றது. தலைமை அலுவலகமும் 2021.07.18 ஆந் திகதி

| | | |
|---|---|---|
| | அந்த இடத்திலிருந்து விலகிச் சென்றுள்ளது. | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் கடன்பட்டோர் மீதியில் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட பழைய ரூபா 700,763 தொகையில் உள்ளடங்கியுள்ள ரூபா 287,763 ஆன மகாவலி எல் வலயத்தில் கைப்பம்பி குழாய்க் கிணறு பழுதுபார்த்தலுக்காக கிடைக்க வேண்டிய நிலுவை மீதி இருந்தது. அப்பெறுமதி 2018 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுவதுடன் அதனை மகாவலி அதிகார சபையிலிருந்து அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த ரூபா 287,763 தொகையை மகாவலி அதிகார சபையின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு அநேக தடவைகள் வாய் மூலம் மற்றும் எழுத்து மூலம் முயற்சிக்கப்பட்ட போதும் அந்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. இது தொடர்பாக நீர் வள சபையின் தலைவருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் எதிர்காலத்தில் மகாவலி அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு இது தொடர்பாக கலந்துரையாடி இந்த பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் மீதியை அறவிடுதல் நாளதுவரையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சேவை முற்பணக் கணக்கில் காணப்பட்ட மீதியில் ரூபா 5,382,771 தொகை ஒரு வருடத்திற்கு மேற்பட்ட முற்பண மீதியாக இருந்தது. அதில் ரூபா 3,553,471 தொகை சபையினால் அதற்குரிய பணிகளை நிறைவேற்றாமையின் காரணமாக மீண்டும் செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்தது. மீண்டும் குழாய் கிணறு நிர்மாணித்தல் வெற்றியளிக்காமையின் காரணமாக ரூபா 1,597,000 பணம் மீண்டும் | கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக மாகாண அலுவலகங்களுடன் தொடர்பு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அதனால் 2021 ஆம் ஆண்டில் பல்வேறு நிலையங்களில் சேவை நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்வதற்கு மேலும் தாமதமாகியிருந்தது. சில | பெறப்பட்ட சேவை முற்பணங்களுக்கு உரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| செலுத்துவதற்கு சபைக்கு ஏற்பட்டிருந்தது. சபையினால் பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம் மற்றும் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளின் வினைத்திறன் இன்மை காரணமாக ரூபா 5,150,471 வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | பிரதேசங்களில் காணப்படுகின்ற நிலக்கீழ் நீர் விஞ்ஞான ரீதியில் அதன் ஆய்வுகளின் சரியான தன்மையை தீர்மானித்தல் வசதியீனமாக இருந்தது. அதனால் பிரதேசங்களில் நிலக்கீழ் நீர் போதியளவாக காணப்படுவதாக உரிய பரிசோதனையின் மூலம் காண்பிக்கப்பட்ட போதும் குழாய்க் கிணறுகள் நிர்மாணிக்கும் போது அந்த இடங்களில் நிலக்கீழ் நீர் தேவையான அளவில் காணப்படாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2017 மார்ச் 16 ஆந் திகதிய இலக்கம் 2010/23 என்ற அதிவிசேட வர்த்தமானி பத்திரம் | | | |
| (அ) கட்டளை இலக்கம் 01 | விவசாய நடவடிக்கைகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட 4 மீற்றர் விட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட பயிர்ச்செய்கை கிணறுகளுக்காக நீர் வளச் சபையின் எழுத்து மூல அங்கீகாரம் பெறவேண்டியிருந்த போதிலும் இதுவரை அதில் எந்தவொரு பயிர்ச் செய்கைக்காகவும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்காத சந்தர்ப்பங்களின் போது சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு நீர் வளச் சபை சட்டத்தில் ஏற்பாடுகள் போதியளவில் இல்லாமையினால் நீர் வளச் சபை சட்டத்தை திருத்தி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள துடன் அதன் பிரகாரம் சட்டத்தை | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | திருத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. | |
| (ஆ) | கட்டளை இலக்கம் 02 | (i) | குழாய் கிணறுகளை நிர்மாணித்தலில் தொடர்ச்சியாக ஈடுபடுகின்ற சகல நிறுவனங்களும் நீர்வளச் சபையில் பதிவு செய்ய வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 67 நிறுவனங்கள் மாத்திரம் பதிவு செய்திருந்தது. அவ்வாறே பதிவு செய்யாது இருக்கின்ற நிறுவனங்கள் என்ன என்பது தொடர்பாக இனங்காண்பதற்காக போதியளவான வேலைத்திட்டம் நிறுவனத்தால் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிலக்கீழ் நீர் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை முறையாக பேணிச் செல்வதற்காக நீர்வளச் சபையின் பதவியணியினர் போதியளவில் இல்லாமையால் மற்றும் இலங்கை முழுவதையும் மேவுகை செய்யும் வகையில் உரிய ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக புதிய பதவிகளை ஏற்படுத்தி ஆட்சேர்த்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது | சட்டத்தின் ஏற்பாடுகளை திருத்தி நிறுவனம் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| | | (ii) | மேற்கூறப்பட்ட பதிவு செய்த நிறுவனத்தினால் புதிய நிர்மாணங்களை மேற்கொள்கின்ற சகல ஆழமான அல்லது ஆழமற்ற குழாய் கிணறுகளின் தரவுகளை உள்ளடக்கிய அறிக்கையொன்று ஒவ்வொரு 03 மாதங்களுக்கும் ஒரு தடவை நீர் வளச் சபைக்கு வழங்க வேண்டியிருந்த போதிலும் இதுவரை பதிவு செய்துள்ள 67 நிறுவகங்களுக்கிடையே மேற்குறித்த அறிக்கையை சமர்ப்பித்திருக்கவில்லை. | வணிக நோக்கங்களுக்காக நீரை பெறுகின்ற நிறுவனங்களின் தகவல்கள் சேகரிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகளுக்காக திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் வெற்றிடங்கள் காணப்பட்ட அத்தியவசிய பதவிகள் சிலவற்றிற்கு ஆட்சேர்ப்பினை மேற்கொண்டதுடன் வெற்றிடங்களை முழுமையாக நிரப்புவதற்கு முடியாதிருந்தது. | குழாய்க் கிணறுகளை நிர்மாணிப்பதில் ஈடுபடுகின்ற நிறுவனங்களின் பதிவினை புதுப்பித்தல் மற்றும் இரத்துச் செய்தல் என்பவற்றுக்குரிய கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்தல் வேண்டும். |
| (இ) | கட்டளை இலக்கம் | (i) | நீர் போத்தலில் இடல் கைத்தொழில் மற்றும் | தற்போது காணப்படுகின்ற | சட்டங்கள், விதிகள் மற்றும் |

| | | | | |
|---|---|---|---|---|
| 03 | | குடிபான உற்பத்திகளில் ஈடுபடுகின்ற ஏதாவது அல்லது அரசாங்க உள்ளூராட்சி நிறுவனங்கள் அல்லது அரச சார்பற்ற அமைப்புக்கள் அல்லது நிறுவனம் நபர்கள் இயற்கை நீர் ஊற்றுக்கள் அல்லது நிலக்கீழ் நீரை தமது உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதாயின் அந்த நீர் மூலத்தின் நீரின் தெரிவொன்று ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒரு தடவை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுகூடமொன்றில் பரீட்சிக்கப்பட்டு உரிய பகுப்பாய்வு அறிக்கை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 40 நிறுவனங்கள் சபையில் பதிவு செய்திருந்த போதிலும் எந்தவொரு நிறுவனமும் மேற்கூறப்பட்ட அறிக்கையை சபைக்கு வழங்கியிருக்கவில்லை | பதவியணியினரின் பங்களிப்புடன் நிலக்கீழ் நீர்வள முகாமைத்துவதற்குரிய அரசாங்கத்தின் பொறுப்புக்களுக்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது தற்போது காணப்படுகின்ற இயந்திரங்களை கவனத்தில் கொண்டு மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர், நீர் வளச் சபை, சமூக நீர் திணைக்களம் போன்ற நிறுவனங்களை தொடர்புபடுத்தி நிலக்கீழ் நீர் மூலங்களின் தகவல்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை வழங்கப்படடுள்ளதுடன் தற்போது அந்த தகவல்கள் நீர்வள சபைக்கு வழங்கப்படுகின்றது. | பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | வணிக ரீதியான விவசாய கைத்தொழிலுக்காக அல்லது கைத்தொழிலுக்காக மாதமொன்றிற்கு 30,000 லீற்றர் நிலக்கீழ் நீர் பெற்றுக்கொள்கின்ற செயற்திட்டத்திற்காக உரிய நீர் மூலம் தொடர்பான தர அறிக்கை (Perimeter Protection Report) நீர் வளச் சபையிலிருந்து பெறப்படல் வேண்டும். அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் | இந்த தகவல்கள் மேலும் முறையாக பெற்றுக் கொள்வதற்காக அமைச்சு செயலாளரினால் மாவட்ட செயலாளருக்கு உரிய பணிகளின் முக்கியத்துவம் குறிப்பிடப்பட்டு மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ள துடன் அந்த தகவல்களை ஒழுங்குமுறையாக பெற்றுக்கொள்வதற்கு தேவையான | சட்டத்தின் ஏற்பாடுகளை பின்பற்றாதுள்ள நிறுவனங்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எந்தவொரு நிறுவனத்திற்கும் உரிய தர அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. இந்த தரவுப் பகுப்பாய்வைச் செய்து பயிர்ச்செய்கை கிணறு, வணிகரீதியிலான, விவசாய ரீதியிலான, கைத்தொழில் தேவைகளுக்காக பயன்படுத்துகின்ற குழாய் கிணறுகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முறையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ஈ) | கட்டளை இலக்கம் 05 | இயற்கை நீர் ஊற்றுக்கள் அல்லது நிலக்கீழ் நீரை பயன்படுத்தி உற்பத்தி மற்றும் சேவை நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிறுவனங்கள் அல்லது இடம் தொடர்பாக முன்னறிவித்தலுடன் அல்லது அறிவித்தலின்றி தினம் எப்போது அல்லது நியாயமான காலத்தின் போது அதன் உற்பத்தி அல்லது சேவை நிலையங்களுக்கு உட்பிரவேசித்து பரீட்சிக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரையிலும் பதிவு செய்திருந்த குடிநீர் போத்தலில் இடும் 40 தொழிற்சாலைகளில் எந்தவொரு களப் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | பரீட்சிக்கும் பணிகளை சரியான பிரகாரம் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் அவ்வாறு மேற்கொள்ளாமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | கட்டளை இலக்கம் 06 | மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் | - மேற்படி - | சட்டங்கள், விதிகள் மற்றும் |

| | |
|---|---|
| நடவடிக்கை எடுக்காத அரசாங்க அல்லது உள்ளூராட்சி நிறுவனங்கள் அல்லது அரசசார்பற்ற அமைப்புக்கள் அல்லது நபர்களுக்கு எதிராக 1964 இன் 29 ஆம் இலக்க மற்றும் திருத்தப்பட்ட 1999 இன் 42 ஆம் இலக்க நீர் வள சபைச் சட்டத்தின் 20 ஆவது பிரிவின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் சட்டத்தின் ஏற்பாடுகளை புறக்கணித்துள்ள நிறுவனங்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 23,910,000 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 12,059,000 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 11,851,000 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டின் வருமானத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 26,855,000 இனால் குறைவடைந்திருந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொழும்பு 07, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய தலைமை அலுவலகம் நடாத்திச் செல்லப்பட்ட இடத்தில் ஆய்கூவுட கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான திட்டம் தயாரிக்கும் பணிகளுக்காக 2015 பெப்ரவரி 25 ஆந் திகதி மத்திய பொறியியல் உசாத்துணை பணியகம் (CECB) இற்கு ரூபா 300,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை கடந்த ஆண்டின் இறுதி வரையில் நடைமுறை வேலை - கட்டிடம் | முன்னர் அமைந்திருந்த தலைமை அலுவலகத்தில் ஆய்வுகூட கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக அங்கீகாரம் பெறும் வகையில் தயாரிக்கப்பட்ட கட்டிட திட்டம் அனுப்பப்பட்டதன் பின்னர் அதற்கான அங்கீகாரம் கிடைக்காமையின் காரணமாக அந்தப் பணம் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை பெற்றதன் பின்னர் புத்தகங்களிலிருந்து பதிவழிக்க வேண்டி | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத் தருக்கு எதிராக தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(Building Working Project) கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரை உரிய நிலத்தை சட்டரீதியாக கைப்பற்றிக் கொள்வதற்கு தவறியதன் அடிப்படையில் அந்த கட்டிடத்தை நிர்மாணிக்கும் பணிகளுக்காக செலவிடப்பட்ட செலவினம் சிக்கனமற்ற செலவினமாக கணக்காய்வில் அதவானிக்கப்பட்டது. நடைமுறை வேலையில் காண்பிக்கப்பட்ட ரூபா 300,000 பெறுமதி மீளாய்வாண்டில் முன்கொண்டு வரப்பட்ட இலாபத்தில் செலவினமாக சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | ஏற்பட்டிருந்தது. | 

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் நீர்வளச் சபையின் அனுராதபுர ஆய்வுகூடத்திற்கு பரிசோதனை நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்ட 360 நீர் மாதிரிகளில் 28 மாதிரிகளே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும் 332 பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டியிருந்தமையால் செயலாற்றல் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | இந்த நீர் மாதிரிகளின் அளவை பகுப்பாய்வு செய்து பூர்த்தி செய்வதற்காக 2021 திசெம்பர் மாதம் முதல் 2022 பெப்ரவரி வரை திட்டமொன்று தயாரிக்கப்பட்டு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் அந்த செயற்பாடுகள் குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்ய முடியும். | உரிய கால எல்லையில் பரிசோதனை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) கந்துரட்ட புதிய கிராமம், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட இந்திய உதவி வீடமைப்பு செயற்திட்டத்தின் மூலம் நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களின் தோட்ட வீடுகளை சார்ந்த 06 குழாய்க்கிணறுகள் நிர்மாணிப்பதற்காக ரூபா | இந்த செயற்திட்டத்தின் கீழ் 06 குழாய் கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள துடன் அதில் 02 குழாய் கிணறுகளில் மாத்திரம் போதியளவான நீர் காணப்படாமையால் வெற்றியளித்திருக்க வில்லை. அந்த இடத்தில் குழாய் கிணறு நிர்மாணிப்பதற்கு தேவையான வழிகள் | பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் களுக்கு எதிராக தாபன விதிக் கோவையின் II ஆவது தொகுதியின் ஏற்பாடுகளுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் குழாய் |

| | | | |
|---|---|---|---|
| | 6,095,000 தொகை 2020 ஆம் ஆண்டின் போது சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. நிர்மாணிக்கப்பட்ட 03 குழாய் கிணறுகள் தோல்வியடைந்ததன் காரணமாக அதற்குரிய தொகையான ரூபா 2,883,000 மீண்டும் செலுத்த வேண்டியேற்பட்டது, அதன் பிரகாரம் சபைக்கு நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன் குழாய்க் கிணறு நிர்மாணிப்பதற்கு பரிந்துரை சமர்ப்பித்த சபையின் நிலக்கீழ் நீர் விசேட நிபுணர்கள் அவ்வாறு செய்தல் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | அமைக்கப்படாமையால் கிணறு நிர்மாணிக்கப்படவில்லை. எதிர்காலத்தின் போது இவ்வாறான நிலைமைகளை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய புவியியல் நிபுணர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கிணறு நிர்மாணிப்பதற் குரிய செயற்பாடுகளை மீளாய்விற்கு உட்படுத்தி தேவையான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | நுரைச்சோலை பிரதேசத்தில் அமைந்துள்ள லக்விஜய வலுக்கூடத்திற்கு அருகில் உள்ள பிரதேசத்தில் தாபிக்கப்பட்டுள்ள குழாய்க் கிணறுகளின் 50 நீர் மாதிரிகளை பரிசோதிப்பதற்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்காக நீர் வளச் சபையினால் கையேற்கப்பட்டிருந்த போதிலும் அனுராதபுர ஆய்வு கூடத்தின் நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மின்சார முறைமை செயலிழந்ததன் காரணமாக தற்றும் தலைமை அலுவலக சூழலில் அமைந்துள்ள ஆய்வுகூடத்தில் தாபிக்கப்பட்டுள்ள உலோக பகுப்பாய்வு இயந்திரம் (shimaza AA - 6300) 2018 ஆம் ஆண்டு முதல் செயலிழந்தமையின் காரணமாக இந்த பணிகள் வெளி நிறுவனத்தினால் செய்துகொள்வதற்கு ரூபா | AAS உபகரணம் சிறிது காலம் பயன்படுத்திய உபகரணமாக இருந்ததுடன் ICP-MS உபகரணம் நவீன அதி தொழில்நுட்பம், நியமங்கள் பலவற்றுடன் சேர்க்கப்பட்டு விரைவாக பகுப்பாய்வு செய்யக் கூடிய துரித உபகரணமாகும். உரிய செயற்திட்டத்தின் தேவையான பகுப்பாய்வு நடவடிக்கைகளில் சரியான தன்மை நவீன உபகரணங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற மையால் 2021.03.30 ஆந் திகதி நடைபெற்ற பிரிவுத் தலைவர்களின் கூட்டத்தின் போது இந்த பகுப்பாய்வு நடவடிக்கைகள் ITI நிறுவனத்திற்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.. | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் களுக்கு எதிராக தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் சபைக்குச் சொந்தமான வளங்களை சரியான பிரகாரம் ஈடுபடுத்தி வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும |

| | | | |
|---|---|---|---|
| | 3,831,300 பெறுமதியொன்று செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபையினால் தமக்கு சொந்தமான வளங்கள் சரியான பிரகாரம் பழுதுபார்த்து பயன்படுத்தாமையின் காரணமாக ரூபா 3,831,300 வருமானம் மீளாய்வாண்டின் போது சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | நீர்வள சபை சட்டத்தை திருத்துவதற்காக 2021 யூலை 12 ஆந் திகதி அமைச்சரவைக் கட்டளை பெறப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய வரைவு சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் சட்டத்தை திருத்தும் நோக்கமாக இனங்காணப்பட்டுள்ள பிழைகள் மற்றும் அதற்குரிய தண்டனைகள் விதிக்கும் போது எழக்கூடிய பிரச்சினைகள் மற்றும் நிலக் கீழ் நீர் பயன்படுத்தப்படாமை மற்றும் வரையறைகளாக எழுந்த பிரச்சினைகள் தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சபை தவறியிருந்தது. | சட்டத்தை திருத்தி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் ஆளுங்கட்சி பாராளுமன்ற கௌரவ அமைச்சர்கள், மற்றும் உறுப்பினர்களுக்கு 2022.02.08 ஆந் திகதி சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் எனினும் அந்த திகதியளவில் நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்றுநோயின் அடிப்படையில் அது சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது. | அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க நீர்வளச் சட்டத்தை திருத்துவதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள 40 பேர்ச் உடைய காணி 2016 திசெம்பர் 06 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 30 வருட கால எல்லைக்காக நீர் வளச் சபைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்தக் காணிக்காக அரசாங்கத்தின் | நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள 40 பேர்ச் காணி சபைக்கு 2016.10.10 ஆந் திகதி பௌதீக ரீதியில் கையளிக்கப்பட்டுள்ளதுடன் 2017 ஆம் ஆண்டின் போது கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான திட்டமொன்று | நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் முறையான பிரகாரம் உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டியிருந்த துடன் திட்டமிடப்பட்ட காலத்தின் பிரகாரம் காணியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீட்டாளரால் வருடாந்தம் ரூபா 2,700,000 வாடகைத் தொகை தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்தக் காணிக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடாமல் 2016 ஆம் ஆண்டு முதல் வருடாந்த வாடகை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்தக் காணி திட்டமிடப்பட்ட பிரகாரம் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் இதுவரை அந்தக் காணிக்காக செலுத்தப்பட்ட ரூபா 10,745,680 பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டின் போது பணிப்பாளர் சபை மாற்றமடைந்ததன் காரணமாக நிர்மாண நடவடிக்கைகளை செய்து கொள்ளல் நிறுத்தப்பட்டிருந்தது. மீண்டும் 2020 ஆம் ஆண்டின் போது திட்டங்கள் தயாரித்து கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்காக சட்ட கட்டணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் வரைவு உடன்படிக்கை பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | பிரமரின் செயலாளரால் 2021 ஏப்ரல் 29 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட இலக்கம் PMO/2/13/20/bldg என்ற கடிதத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் நீர்வள சபையின் தலைமை அலுவலகம் அந்த இடத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்தக் காணி மற்றும் கட்டிடம் பிரதமர் அலுவலகத்திற்கு கையளிக்கும் ஆவணம் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை அந்த நிலத்தில் அமைந்துள்ள கட்டிடத்திற்கு பதிலாக வேறொரு கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக | கொழும்பு 07, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள காணி நீர் வளச் சபைக்கு சொந்தமான காணியாக இல்லாதிருந்தமையை தயவுடன் அறியத் தருகின்றோம். பிரதமர் செயலகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட 2021.04.29 ஆந் திகதிய கடிதம் மூலம் நிலப்பகுதி 2021.05.01 ஆந் திகதிக்கு முன்னர் வழங்க வேண்டியிருந்தமை அறிவிக்கப்பட்டதுடன் தற்காலிக கட்டிடமொன்றை பெற்று நீர் வளச் சபையின் அலுவலகத்தை அமைக்குமாறு கோரப்பட்டிருந்தது. அதன் | தலைமை அலுவலகம் வாடகை அடிப்படையில் வேறொரு இடத்திற்கு கொண்டு செல்லும் போது செய்வதற்கு ஏற்பட்ட கிரயத்தின் காரணமாக நிறுவனத்தை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்குள்ள தாக்கங்கள் தொடர்பாக அமைச்சரவைக்கும் அறிவித்து தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தேவையான நிதியேற்பாடு நிதி அமைச்சின் மூலம் வழங்கப்படுவதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட போதிலும் அதன் பிரகாரம் உரிய நிதியேற்பாடு பெற்றுக் கொள்வதற்காக தேவையான கொள்கை ரீதியான விடுவிப்பினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2022 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டு சட்டத்தின் மூலம் அதற்காக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள தலைமை அலுவலகம் 2021 யூலை மாதம் 19 ஆந் திகதி முதல் இராஜகிரியவில் அமைந்துள்ள தனியார் கட்டிடமொன்றில் மாதாந்தம் ரூபா 950,000 வாடகைத் தொகையின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்டு நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. அந்தக் கட்டிடத்தில் தலைமை அலுவலகத்தை அமைப்பதற்காக ரூபா 671,985 கிரயமொன்று செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அக்கட்டிடத்திற்காக ரூபா 4,750,000 வாடகைத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. உரிய உடன்படிக்கை ஒரு வருட காலத்திற்காக மாத்திரம் செல்லுடியானதாக கைச்சாத்திடப்பட்டதன் காரணமாக 2022 யூலை மாதம் 18 ஆந் திகதியில் நீர்வளச் சபையின் தலைமை அலுவலகம் வேறொரு இடத்திற்கு கொண்டு செல்ல ஏற்பட்டிருந்தது. | பிரகாரம் தற்காலிக கட்டிடமொன்றை பெற்று 2021.07.19 ஆந் திகதி முதல் நீர்வளச் சபை நடாத்திச் செல்லப்படுவதுடன் அதற்காக ஏற்படுகின்ற மாதாந்த வாடகை பிரதமர் அலுவலகத்தினால் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வேறொரு கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் இவ்வாறான சந்தர்ப்பத்தின் போது தேவையான நிதியேற்பாடு சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். | |
| (எ) | இலங்கையில் நிலக்கீழ் நீரில் காணப்படுகின்ற போதியளவான மற்றும் தரத்தன்மை | இந்த பயிற்சியினை வழங்குவதற்காக நெதர்லாந்து தோன்றும் பதவியணியினர் 1½ | செயற்திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்காமையின் |

முகாமைத்துவத்திற்காக தேவையான தரவு முறையொன்றை தாபிப்பதற்கு நீர்வளச் சபையால் 2015 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவை அடிப்படையாகக் கொண்டு நிலக்கீழ் நீரில் உள்ளடக்கியுள்ள தகவல்கள் தகவல் வலையமைப்பை தாபிப்பதற்காக 2015 யூலை மாதம் 10 ஆந் திகதி அமைச்சரவைக் குறிப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் ஆரம்பமாக சிறுநீரக நோய் கணிசமான அளவில் பரவியுள்ள அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை போன்ற தெரிவு செய்யப்பட்டுள்ள சில மாவட்டங்களில் நிர்ணயிக்கப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அந்த அங்கீகாரத்தை செயற்படுத்துவதற்காக நெதர்லாந்து றோயல் ஐக்கல் கேம்ப் (Eijkelkamp Earth Sampling Group) நிறுவனத்திற்கு யூரோ 20,629,921 செலவினத்தின் அடிப்படையில் கையளிப்பதற்காக 2017 ஒக்தோபர் 03 ஆந் திகதி உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் கீழ் யூரோ 2,240,030 அதாவது ரூபா 393.976 மில்லியன் ஆன 02 தோன்றும் இயந்திரங்கள் செயற்திட்ட இறுதியின் பின்னர் சபைக்கு கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த இயந்திரங்கள் செயலிழந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலம் நாட்டிற்கு வருகை தராமையின் காரணமாக பயிற்சி நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டிருந்தது. 2022.01.01 ஆந் திகதி முதல் நீர்வளச் சபையின் தோன்றும் உத்தியோகத்தர்கள் இருவர் பயிற்சியளிக்கப்பட்டிருந்த துடன் தோண்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அந்த காணிகளை முறையான பிரகாரம் நீர்வளச் சபைக்கு கையளிக்காமையால் கட்டிட திட்டத்தை தயாரிப்பதற்கு ஒப்பந்தகாரருக்குரிய இயலுமை காணப்படவில்லை. தரவு நிலைய கட்டிடத்திற்கு மேலதிகமாக நீர்வளச் சபையின் தலைமை அலுவலகத்தை தாபிப்பதற்காகவும் யூரோ 439,539.00 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. தற்போது வரையில் நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியின் காரணமாக இந்தக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டுத் தொகையில் மேற்கொள்ளல் வசதியீனமாக இருந்தது. எனினும் தற்போது தரவு நிலையமொன்று இரத்மலான செயற்திட்ட அலுவலகத்தில் தாபிக்கப்பட்டமையால் செயற்திட்டத்தின் நோக்கங்களுக்கு எவ்விதமான பாதகமான தாக்கமும் மூலம் ஏற்படுகின்ற தாக்கங்கள் தொடர்பாக முறையான புலனாய்வின் மூலம் மதிப்பீடு செய்து பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| தேவையான பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் கீழ் யூரோ 1,033,928 செலவில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட தரவு நிலையம் 04 வருடங்கள் கடந்திருந்த போதிலும் நிர்மாணிக்கப்பட்டிருக்க வில்லை. செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு இணையாக கட்டிடம் நிர்மாணிக்கப்படாமையின் காரணமாக செயற்திட்டத்தின் நோக்கம் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | ஏற்பட்டிருக்கவில்லை. | |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அனுராதபுரம் மாகாண அலுவலகத்தில் தாபிக்கப்பட்ட ஆய்வுகூடத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிலக்கீழ் நீரில் காணப்படுகின்ற விவசாய இரசாயனம் தொடர்பாக பகுப்பாய்வு செய்வதற்காக எடுக்கப்பட்ட ரூபா 32,535,430 பெறுமதியான GC MS -MS என்ற உபகரணம் வழங்கப்பட்ட திகதி முதல் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்ட போதிலும் அந்த உபகரணங்களை வழங்கிய நிறுவனத்தினால் பெறப்பட்டிருந்த வருடாந்த உத்தரவாதக் (2018.08.09 முதல் 2019.08.08) காலத்தில் அதனை பழுதுபார்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நீரில் காணப்படுகின்ற | இந்த உபகரணங்களை வழங்கிய திகதி முதல் செயற்பாடற்ற நிலையில் காணப்படவில்லை. உரிய வழங்குனர் கம்பனியால் நீர்வளச் சபையின் ஆய்வுகூட பணியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டதுடன் அதனிடையே உபகரணங்கள் செயலிழந்திருந்ததுடன் அதனை சரிசெய்வதற்காக ரூபா 3,820,129 பெறுமதியுடைய உதிரிப்பாகத்தை பொருத்துதல் தேவையாக இருந்தது. அதுவரையிலும் ஒரு வருட உத்தரவாத காலம் முடிவடைந்தமையால் அந்த தொகையை சபைக்கு செலுத்த வேண்டியேற்பட்டது. தற்போது சபையில் | உபகரணம் செயலிழந்த நிலைக்கு உட்படும் வரை தேவையான நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் களுக்கு எதிராக தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் ஏற்பாடுகளுக் கமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விவசாய இரசாயன உள்ளடக்கத்தை பகுப்பாய்வு செய்யக் கூடிய எந்தவொரு உபகரணமும் நீர் வளச் சபையிடம் காணப்படாதிருக்கும் போது அந்த உபகரணத்தை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக அதனை பயன்படுத்துவதற்கு முடியாததாக கருதி வேறொரு செயற்திட்டத்திற்கு வழங்குவதற்கு தலைவர் நடவடிக்கை எடுத்திருந்தமை கணக்காய்வின் போது பிரச்சினைக்குரிய நிலைமையாக இருந்தது. | காணப்படுகின்ற நிதி ரீதியான வசதியீனம் காரணமாக இந்த உபகரணம் JRDC செயற்திட்டத்திற்கு வழங்குவதற்கு சபையின் முகாமைத்துவம் தீர்மானம் எடுத்திருந்தது. இவ்வாறான உபகரணமொன்றை பராமரித்தல் மற்றும் பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்காக நடாத்திச் செல்வதற்கு நிதிரீதியான இயலுமை இந்த சந்தர்ப்பத்தின் போது சபையிடம் காணப்படாமையால் ரூபா 3,820,129 பெறுமதியுடைய உதிரிப்பாகத்தை மீண்டும் பொருத்துவதற்கு ஏற்பட்டமையால் சீன இலங்கை ஆராய்ச்சி செயற்திட்டத்திற்கு தலைவரால் கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. | |
| (ஆ) | நீர்வளச் சபைக்குச் சொந்தமான 16 துளையிடும் இயந்திரங்கள் காணப்பட்டதுடன் அதில் 03 இயந்திரங்கள் செயலிழந்த நிலையில் காணப்பட்டதன் காரணமாக 2013 ஆம் ஆண்டு முதல் விற்றுத் தீர்ப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இதுவரை விற்றுத் தீர்க்கப்படவில்லை. 05 துளையிடும் இயந்திரங்களை பழுதுபார்க்க வேண்டிய நிலைமையில் காணப்பட்ட போதும் இதுவரை உரிய நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் 08 துளையிடும் இயந்திரங்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டில் 80 குழாய் கிணறுகள் மாத்திரம் | நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமையின் கீழ் குழாய்க் கிணறுகளை தோண்டுவதற்கான விண்ணப்பங்கள் கணிசமாக கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே காணப்பட்ட கொவிட் நிலைமைக்கு இடையே நீ.வ.ச பணம் செலுத்தி 80 குழாய் கிணறுகள் 2021 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் குழாய்க் கிணறுகளை மூடுவதற்கு கிடைத்த மிகுதி அளவு சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்த அளவு 20 குழாய் | துளையிடும் பிரிவின் செயற்பாடுகள் தொடர்பாக மீளாய்வொன்றை மேற்கொண்டு சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நிர்மாணிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் துளையிடல் பிரிவின் செயலாற்றல் மிகவும் கீழ்மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

கிணறுகளாகும். துளையிடும் இயந்திரங்களை பழுதுபார்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் மேலதிக உதிரிப்பாகங்களின் பற்றாக்குறை மற்றும் கொவிட் தொற்று நோய் இடையே அதில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தது. விற்றுத் தீர்க்கப்பட வேண்டிய துளையிடும் இயந்திரங்கள் தொடர்பாக தீர்மானம் எடுத்து மீண்டும் அகற்றுவதற்காக மீண்டும் கேள்வி கோரப்பட்டுள்ளது.